1978 மார்ச் 14]

திரு. கே. உச்சி : உதகையில் கலையரங்கம் ஏற்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பரிசீலனையைக் கொஞ்சம் வேகமாகச் செய்து இந்த ஆண்டே அமைச்சர் முன்னிலையில் தொடங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புகிறபடி பரிசீலிக்க வேண்டிய பிரச்சினைகள் இருக்கும்போதுதான் வேறுபல பிரச்சினைகளைப் பரிசீலிக்க வேண்டிய நெருக்கடிக்கு அரசு ஆளாகிக் கொண்டிருக்கிறது. இதெல்லாம் தீர்ந்த பிறகுதான் அவைகளைப் பற்றி பரிசீலிக்க முடியும்.

தொழிலாளர் துறையில் வேலைவாய்ப்பு.

*555 வினா—திரு. கே. சுப்பிரவேலு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தொழிலாளர் துறையில் தற்போது பணியாற்றுபவர்களில், தொழிலாளர் அலுவலர், உதவி ஆய்வாளர், உதவி தொழில் ஆய்வாளர், துணை ஆய்வாளர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எத்தனை பேர் ?

(இ) விகிதாச்சார முறையான 18 சதவிகிதம் உள்ளதா ?

(ஈ) இல்லையேல் அரசின் எதிர்கால நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) முதல் (ஈ) வரை: பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. சுப்பிரவேலு : தொழிலாளர் துறையில் இருக்கின்ற ஊழியர்களில் 18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குக் கொடுக்கப்படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது என்று மக்கள் மத்தியில் தகவல் இருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு மத்திய சர்க்காரில் எஸ்.சி. மற்றும் எஸ்.டி. காக ஜாயிண்ட் செலக்ட் கமிட்டி போட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கமிட்டியை நம்முடைய அரசும் அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வேலைக்கு எடுக்கும்போது 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரப்படுகிறது. மாறுபட்ட தகவல் இருந்தாலும் அதுபற்றி எனக்கு எழுதிக் கொடுத்தால் அதை நான் பரிசீலிக்கிறேன்.

---

*491-492ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது]